**தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையிம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதிகாரசபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபை ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபையின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு "முறையாக திட்டமிடப்பட்ட" உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக்கொள்வது அவசியமாகவுள்ளது.

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அதிகார சபைக்குச் சொந்தமான ரூபா 108,582,088 கிரயமான 26 மோட்டார் வாகனங்கள் மற்றும் ஒரு மோட்டார் சைக்கிள் என்பவற்றின் கிரயம் பூச்சிய பெறுமதியாக இருந்தது. அதில் மீளாய்வாண்டில் 21 வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன ரூபா 75,890,000 தொகையில் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 12,505,536 கிரயமான 05 வாகனங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் பிரகாரம் மொத்த வாகன தொகுதிகளும் மீள்மதிப்பீடு செய்யப்படாதிருந்ததுடன் அது கணக்குகளில் குறிப்புக்களின் மூலம் மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்தது. | அதிகார சபையினால் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 29 ஆவது பிரிவின் பிரகாரம் சொத்துக்கள் கிரயத்தில் காண்பிக்கும் கொள்கை பின்பற்றப்படுகின்றது. எனினும் 2017 இன் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் ஒரு தொகுதிக்குரிய சொத்துக்களின் வகை முழுமையாக மீள்மதிப்பீடு செய்து காண்பிப்பதற்காக சகல மோட்டார் வாகனங்களினதும் பெறுமதி மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டுமென காண்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2019 மற்றும் 2020 ஆம் என்ற இரண்டு ஆண்டுகளிலும் மதிப்பீட்டு திணைக்களத்தின் மூலம் வாகனங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட போதும் முழுத் தொகுதியையும் மீள்மதிப்பீடு செய்து பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. அதன் | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பிரகாரம் 2020 ஆம் ஆண்டின் போது மீள்மதிப்பீடு செய்யப்பட்ட வாகனங்களின் பெறுமதி மற்றும் அவ்வாறு செய்வதற்கு முடியாதிருந்த வாகனங்களின் இலக்கம், கணக்கு அறிக்கையில் குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | |
| (ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் பிரகாரம் உள்ளபடியான காசுப்பாய்ச்சலை காண்பிப்பதற்கு பதிலாக 2021 ஏப்ரல் 06 ஆந் திகதி ஜீஎஸ்எம்பி தொழில்நுட்ப சேவை (தனியார்) கம்பனியிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 500,000 இலாப பங்கு வருமானம் மீளாய்வாண்டில் ஏற்பட்ட காசு உட்பாய்ச்சலாக காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த மையின் காரணமாக காசுப்பாய்ச்சல் கூற்றில் காசு உட்பாய்ச்சல் அப் பெறுமானத்தினால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | இலாபப்பங்கு பெறுவனவாக ரூபா 500,000 இலாப்பங்கு வருமானம் முதலீட்டு செயற்பாடொன்றாக காண்பிக்கப்பட்டுள்ளது. அது கிடைக்க வேண்டிய வருமானத்தின் கீழ் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | - மேற்படி - |

### 1.5.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகார சபையின் கணக்கீட்டு கொள்கையின் பிரகாரம் சொத்துக்களுக்குரிய இழப்பீட்டு நட்டங்களை இனங்காணும் போது அந்த சொத்துக்கள் மீளாய்வு செய்யப்பட்டு அதற்குரிய ஒதுக்க வேண்டிய இழப்பீட்டு நட்ட பெறுமதி வருடாந்தம் மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் ஏனைய சொத்துக்கள், பெறவேண்டியவைகள் மற்றும் வைப்புக்களுக்காக முறையே | இழப்பீட்டு நட்டம் வருடாந்தம் மதிப்படு செய்யப்பட்டிருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டின் பின்னர் இழப்பீட்டு நட்டம் தொடர்பாகவும் புதிய ஒதுக்கீடுகளுக்குரிய தகவல்களும் அந்தந்த பிரிவுகளில் விசாரணை செய்யப்பட்ட போதும் அதற்கு பதிலளிக்கப்படாமையினால் முன்னர் மேற்கொள்ளப்பட்ட | அதிகார சபையின் கணக்கீட்டு கொள்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ரூபா 200,000, ரூபா 1,407,972 மற்றும் ரூபா 1,433,947 தொகையான ஒரே பெறுமதியில் 2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையும் இழப்பீட்டு நட்டமாக கணக்குகளில் சீராக்கப்பட்டிருந்தது. | ஒதுக்கீடுகள் அந்த வகையில் காண்பிக்கப் பட்டுள்ளது. | |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை சுங்க பொறுப்பில் எடுக்கப்பட்டு 03 தசாப்த காலம் முதல் அதிகார சபையின் பாதுகாப்பகத்தில் வைக்கப்பட்டு முத்திரையிடப்பட்ட 19 இரத்தினக்கல் பொதிகள் 2021 பெப்ரவரி 09 ஆந் திகதி இலங்கை சுங்கத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் பல வருட காலமாக அது அதிகார சபையின் பாதுகாப்பில் வைக்கப்பட்டமைக்காக அந்த பொதிகளுக்காக நாளொன்றுக்கு ரூபா 50 வீதம் அறவிட வேண்டிய கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2021.02.09 ஆந் திகதி பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட குழுவின் மூலம் இரத்தினக்கல் பரீட்சிக்கப்பட்டு பல வருட காலமாக ஏற்றுமதி பிரிவின் பாதுகாப்பகத்தில் வைக்கப்பட்டிருந்த இலங்கை சுங்கத்திற்குரிய (ஏற்றுமதி பிரிவில் முன்னிருந்து கொண்டு வரப்படுகின்ற பதிவேட்டின் பிரகாரம்) இரத்தினக்கல் பொதிகள் முறையாக இலங்கை சுங்க இரத்தினக்கல் அலகிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே இந்த இரத்தினக்கல் பல வருட காலமாக அதிகார சபையின் பாதுகாப்பகத்தில் வைக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக கட்டணம் அறவிடல் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | அதிகார சபையில் காணப்படுகின்ற சட்டங்கள், விதிகளின் பிரகாரம் கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க | நிதி அமைச்சின் அங்கீகாரம் | கணக்காய்வு அவதானிப்புடன் | சட்டத்தின் ஏற்பாடுகளின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு | பெறப்படாமல் ரூபா 1,059,635,760 மற்றும் ரூபா 836,057,461 தொகைகள் முறையே திறைசேரி உண்டியல்களிலும் நிலையான வைப்புக்களிலும் முதலீடு செய்யப்பட்டிருந்தன. | இணங்குகின்றோம். திறைசேரி உண்டியல்கள் மற்றும் நிலையான வைப்புக்களில் முதலீடுகளின் மூலம் கிடைக்கின்ற வட்டி வருமானம் அந்த வைப்புக் கணக்குகளில் முதலீடுகளுடன் சேர்க்கப்பட்டுள்ளது. இவ்வாறு முதலீடு செய்யப்பட்டிருப்பது தற்காலிக செயற்படு மூலதனத்தை விஞ்சுகின்ற பணமாக இருந்ததுடன் அதற்குரிய பொறுப்புக்களும் அந்தந்த சந்தர்ப்பங்களின் போது விடுவிக்கப்படுவது இந்த நிதியத்திலிருந்தாகும். | பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத் தின் 2001 நவம்பர் 12 ஆந் திகதிய DMS/EAMIL MRD/A/8 ஆம் இலக்க சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு முரணாக அடிப்படைச் சம்பளம் மற்றும் வாழ்க்கைச் செலவுகளை உள்ளடக்கி 01 மாத சம்பளம் மீளாய்வாண்டில் ஊக்குவிப்பு படியாக செலுத்தப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றோம். முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் 2001 நவம்பர் 12 ஆந் திகதி ஊக்குவிப்பு படி செலுத்துவதற்காக அனுப்பப்பட்டிருந்த சுற்றறிக்கையின் கீழ் Common pool மற்றும் Profit pool என்ற இரண்டு அடிப்படையின் கீழ் வருடாந்த இலாபத்தில் 20 சதவீதம் ஊக்குவிப்பு படி செலுத்துவதற்காக அங்கீகாரம் கிடைத்திருந்த மையால் அந்த அளவு ஊக்குவிப்பு படிக்காக ஒதுக்கப்பட்ட போதும் உரிய சுற்றறிக்கை நாளதுவரையாக்கப் படாமையின் காரணமாக மொத்த ஊக்குவிப்பு படி செலுத்தாமல் Profit pool | சுற்றறிக்கை ஆலோசனைக ளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அடிப்படையில் மாத்திரம் கணிப்பிடப்பட்டு ஊக்குவிப்பு படியின் பகுதி ஒன்றாக ஒரு மாத சம்பளம் மாத்திரம் மேற்கூறப்பட்ட ஊக்குவிப்பு படியாக செலுத்தப்படடுள்ளது. | |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 1645 | வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணம் செலுத்துதல் தொடர்பாக 05 வாகனங்களின் சம்பவ திரட்டு புத்தகங்கள் 2015/2016 ஆண்டுகளின் பின்னர் குறிப்புக்கள் இடப்பட்டு நாளதுவரையாக்கப் படாதிருந்ததுடன் ஒரு வாகனம் அது தொடர்பாக எந்தவொரு குறிப்பையும் இட்டிருக்கவில்லை. அவ்வாறே 06 வாகனங்களின் மோட்டார் வாகனத்தின் விபரங்கள் குறிப்பிடப்பட வேண்டிய பக்கங்கள் குறித்துரைத்த பிரகாரம் பூர்த்தி செய்யப் பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 1645 இன் பிரகாரம் அதிகார சபையின் வாகனங்களுக்காக சம்பவத் திரட்டு புத்தகங்களை பேணிச் செல்வதற்காக பொறுப்புக்கள் கையளிக்கப்பட்ட சாரதிகளை மாற்றுவதற்கும், சுழற்சி அடிப்படையில் கடமைகளுக்காக அறிக்கையிடப்பட்டமையின் காரணமாக இந்த நாளதுவரையாக்கல் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் சகல சம்பவத் திரட்டு புத்தகங்களையும் நாளதுவரையாக்கி பேணிச் செல்லுமாறு நிர்வாகப் பிரிவிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. சகல வாகனங்களுக்காகவும்வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளமையால் அதன் பிரகாரம் சம்பவத் திரட்டு புத்தகங்களை குறித்துரைத்த பிரகாரம் தயாரித்தல் தற்போது | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (ii) | நிதிப்பிரமாணம் 1646 | அதிகார சபையின் வாகனங்களுக்காக மீளாய்வாண்டின் மாதாந்த பொழிப்பு சமர்ப்பிக்கப்படாதிருந்த துடன் 25 வாகனங்களுக்காக நாளாந்த ஓட்ட அட்டவணை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. அந்த 25 வாகனங்களுக்கிடைடே ய 03 மாதங்களுக்கு மேற்பட்ட காலத்திற்காக மாதாந்த ஓட்ட அட்டவணை சமர்ப்பிக்கப்படாத வாகனங்களின் எண்ணிக்கை 17 ஆகும். | நிதிப்பிரமாணம் 1646 இன் பிரகாரம் வாகனத்திற்குரிய ஓட்ட அட்டவணை தொடர்ந்து வரும் மாதத்தின் முதலாவது வாரத்திற்குள் அரசாங்க கணக்காய்வு பிரிவிற்கு அனுப்பப்பட வேண்டியிருந்த போதிலும் ஓட்ட அட்டவணைகள் உரிய காலத்தில் நிர்வாகப் பிரிவிற்கு சமர்ப்பிக்குமாறு சாரதிகளுக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் காணப்பட்ட கொரோனா அச்சுறுத்தலின் காரணமாக கடமை நடவடிக்கைகளை தொடர்ச்சியாக பேணிச் செல்ல முடியாதிருந்தமையினால் ஓட்ட அட்டவணை தயாரித்தல் செயழிலந்து காணப்பட்டமையை ஏற்றுக்கொள்கின்றோம். இது தொடர்பாக விசேட கவனம் செலுத்தி கடந்த ஆண்டுகளுக்குரியதாக தவறவிடப்பட்ட ஓட்ட அட்டவணைகளை பூர்த்தி செய்வதற்கும், இந்த ஆண்டு முதல் ஓட்ட அட்டவணைகளை முறைமைப்படுத்துவதற்கு ம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |

## 2. நிதி மீளாய்வு

-----------------------

### 2.1 நிதி விளைவுகள்

----------------------------

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 25,577,610 இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான இலாபம் ரூபா 160,991,829 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 135,414,219 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு கொவிட் 19 தொற்றுநோய் தாக்கத்தினால் ஏற்பட்டிருந்த இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்களின் ஏற்றுமதி சேவைக் கட்டணம், இரத்தினக்கல் மதிப்பீடு செய்யும் போது கிடைக்கின்ற கட்டணம், இரத்தினக்கல் அனுமதிப்பத்திரக் கட்டணம், ஏனைய பெறுவனவுகள்

குறைவடைந்தமை மற்றும் ஏற்றுமதி சேவைகள் கட்டணம் உரியவாறு அறவிடுவதில் தாமதம் ஏற்பட்டிருந்தமை என்பன பிரதான காரணங்களாக இருந்தன.

### 2.2 பிரதான வருமானங்கள் மற்றும் செலவின விடயங்களின் முக்கிய பகுப்பாய்வு

| வருமானம் | 2020 | 2019 | அதிகரிப்பு சதவீதம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|---|
| இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் ஏற்றுமதி சேவைக் கட்டணம். | 83,380,249 | 127,690,365 | (34.70) | ஏற்றுமதி சேவைக் கட்டணம் உரியவாறு அறவிடுவதில் தாமதம் ஏற்பட்டிருந்தமை. |
| இரத்தினக்கல் வியாபார அனுமதிப்பத்திர வருமானம் | 39,952,148 | 53,522,824 | (25.35) | கொவிட் 19 தொற்று நோய் தாக்கத்தினால் வருமானம் குறைவடைந்தமை. |
| இரத்தினக்கல் மதிப்பீட்டு வருமானம் | 10,606,562 | 25,189,250 | (57.89) | - மேற்படி - |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சட்டரீதியான ஏற்பாடு மற்றும் அதிகார பலமின்றி அதிகார சபையின் ஒரு ஊழியருக்கு ரூபா 6,000 வீதம் ரூபா 1,482,000 கூட்டுமொத்தமான படியொன்று நலன்புரிச் சங்கத்தின் மூலம் அதிகார சபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. | அதிகார சபைச் சட்டத்தின் 14.2(3)(ஐ) பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் பதவியணியினருக்காக நலன்புரி மற்றும் களியாட்ட வசதிகளை வழங்குவதற்காக நிதியேற்பாடு ஒதுக்க முடியும் என சட்டரீதியான ஏற்பாடு காணப்படுகின்றமையினால் அதன் கீழ் வருடாந்தம் நலன்புரி சங்கத்திற்கு நலன்புரி செயற்பாடுகளுக்காக வருடாந்த பாதீட்டின் மூலம் குறித்துரைத்த தொகையொன்று ஒதுக்கப் படுவதுடன் அந்தத் தொகை நலன்புரி | சட்டரீதியான ஏற்பாடுகள் மற்றும் அதிகார பலமின்றி மேற்கொள்ளப்படுகின்ற இவ்வாறான கொடுப்பனவுகளை மேற்கொள்ளாதிருப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

சங்கத்தின் கணக்கில் செலவு வைக்கப்படுகின்றது. அதன் கீழ் 2020 ஆம் ஆண்டிற்காகவும் ரூபா 1,482,000 தொகையொன்று சங்கத்தின் பணிகளுக்காக வருடாந்த பாதீட்டில் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் நலன்புரி சங்கத்தினால் 2020 ஆம் ஆண்டில் கொரோனா ஆபத்தின் காரணமாக நாடு மூடப்பட்டிருந்த காலத்தில் ஊழியர்களின் பொருளாதார வசதியீனத்தைக் கருத்தில் கொண்டு ரூபா 6,000 வீதம் நலன்புரி படியொன்று செலுத்தப்பட்டிருந்தது.

## 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) (i) | அதிகார சபையின் காணி, அகழ்வு மற்றும் சுற்றாடல் பிரிவின் பொறுப்பு பணிப்பாளரின் வேலை நீக்கம் செய்யப்பட்டு ஒழுக்காற்று பரிசோதனையொன்று நடத்தும் போது விடயப் பொறுப்பு அமைச்சரினால் உரிய உத்தியோகத்தர் சேவையில் அமர்த்தப்பட்டு ஒழுக்காற்று பரிசோதனை மேற்கொள்ளுமாறு அறிவித்ததன் அடிப்படையில் ஒழுக்காற்று பரிசோதனையின் கீழ் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டிருந்தார். பின்னர் உரிய உத்தியோகத்தர் சமர்ப்பித்த முறைப்பாடொன்று அதிகார சபையின் உள்ளகக் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டு அவரினால் விநியோகிக்கப் பட்ட அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு | இந்த பரீட்சிப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட செலவினம் பயனற்றதாக இருந்தமையை ஏற்றுக்கொள்கின்றோம். இந்த ஆரம்ப விசாரணையை மிகவும் சுயாதீனமாகவும் வெளிப்படையாகவும் மேற்கொண்டு தேவையின் அடிப்படையில் ஆரம்ப விசாரணையொன்றை மேற்கொள்ளல் தொடர்பாக விசேட நிபுணர்களின் அனுபவங்களுடன் ஓய்வுபெற்ற வெளி உத்தியோகத்தரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமையினால் அதன் கீழ் விசாரணைகளுக்காக இந்த செலவினங்களை செய்வதற்கு ஏற்பட்டிருந்ததை ஏற்றுக்கொள்கின்றோம். எனினும் அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப விசாரணை அறிக்கை வழுக்களுடன் இருந்தமை தொடர்பாக உள்ளக | ஒழுக்காற்று பரிசோதனையை சரியானதாக மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன் அதற்காக இவ்வாறான பயனற்ற செலவினங்களை செய்யாதிருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சகல குற்றங்களில் இருந்தும் உரிய உத்தியோகத்தர் விடுவிக்கப்பட்டு ஒழுக்காற்று பரிசோதனையை நிறுத்துவதற்கு அதிகார சபையின் தலைவரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. உத்தியோகத்தரை மீண்டும் சேவையில் அமர்த்துதல் மற்றும் விடுவிப்பதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்படாதிருந்ததுடன் அவ்வாறான விடுவித்தலுக்காக உரிய கடிதமும் விநியோகிக்கப்பட்டிருக்க வில்லை. இந்த விசாரணைகளுக்காக அதிகாரசபையினால் செலவிடப்பட்ட ரூபா 405,300 தொகை பயனற்ற செலவினமாக இருந்தது, இதற்கு மேலதிகமாக இந்த உத்தியோகத்தர் தொடர்பாக நடாத்தப்பட்ட இன்னுமொரு விசாரணையொன்றில் மேற்கூறப்பட்ட அதிகார சபையின் சகல குற்றங்களிலிருந்தும் விடுவிப்பதற்கு அதிகார சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டமையினால் அதற்காக செலவான ரூபா 122,610 செலவினமும் பயனற்ற செலவினமாக இருந்தது. | கணக்காய்வினால் அனுப்பப்பட்டிருந்த அறிக்கை, அத்திகதியில் உத்தியோகத்தரின் முறைப்பாடு, ஆரம்ப விசாரணை அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்கள் யாவற்றையும் கவனத்தில் கொண்டு ஒழுக்காற்று அதிகாரியினால் தலைவர் / பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரினால் அந்த உத்தியோகத்தரை குற்றங்களிலிருந்து விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. ஒழுக்காற்று விசாரணைகள் நடாத்துதல், மீண்டும் சேவையில் அமர்த்துதுல் மற்றும் குறித்த உத்தியோகத்தரை விடுவித்தல் போன்ற தீர்மானங்கள் ஒழுக்காற்று அதிகாரியினால் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானமாக இருந்தமையினால் தலைவரினால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இந்த ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேலும் எதிர்காலத்தில் நடாத்திச்செல்லப்படுமாயின் அதிகார சபைக்கு ஏற்படக் கூடியதாக இருந்த நிதிரீதியான நட்டம் அந்த தொகையினை விட சில மடங்குகளால் அதிகரிக்க வேண்டியிருந்தமையால் தலைவரினால் இந்த விசாரணையை கைவிடுவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தமையை சுட்டிக்காட்டுகின்றோம். | |
| (ii) | பட்டை தீட்டப்படாத இரத்தினக்கல் ஏலத்திற்குரிய இரத்தினக்கல் மதிப்பீடு செய்யும் முறைமையில் ஏற்பட்ட மோசடிகள் | இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் முறையான ஒழுக்காற்று விசாரணைக்காக செலவிடப்பட்ட ரூபா 377,000 | ஒழுக்காற்று பரிசோதனையை சரியாக மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன் அதற்காக |

தொடர்பாக 05 உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் நடாத்தும் போது அதில் 04 உத்தியோகத்தர்களுக்கு முறையான ஒழுக்காற்று விசாரணையின் கீழ் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டிருந்ததுடன் ஒரு உத்தியோகத்தர் ஓய்வுபெற்றுச் செல்லும் வயதைப் பூர்த்தி செய்திருந்தமையால் ஓய்வுபெற்றுச் சென்றிருந்தார். இதன் போது முறையான ஒழுக்காற்று விசாரணையொன்று நடாத்தும் போது அது கைவிடப்பட்டு அதிகார சபையின் உள்ளக பரிசோதனை குழுவொன்று நியமிக்கப்பட்டு அந்தக் குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு 02 உத்தியோகத்தர்களுக்கு எச்சரிக்கை செய்தல் மற்றும் மேலும் 03 உத்தியோகத்தர்களுக்கு சகல குற்றங்களிலிருந்தும் விடுவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இந்த ஒழுக்காற்று விசாரணைக்காக செலவிடப்பட்ட ரூபா 377,000 பயனற்ற செலவினமாக இருந்தது.

தொகை பயனற்ற செலவினமாக இருந்ததை ஏற்றுக்கொள்கின்றோம். முறையான ஒழுக்காற்று விசாரணை நடவடிக்கைகளை விரைவுபடுத்தி ஒழுக்காற்று கட்டரளையொன்றை வழங்குமாறு ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர்களுக்கு பல சந்தர்ப்பங்களின் போது அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் அந்த நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்தமையால் விசாரணைக்காக அநாவசியமான காலம் மற்றும் செலவினங்களை செய்வதற்கு ஏற்பட்டதன் அடிப்படையில் ஒழுக்காற்று அதிகாரியின் தலைவரால் 2020 யூன் 30 ஆந் திகதி புதிய முறையான ஒழுக்காற்று விசாரணையை கைவிடுவதற்கும், உள்ளக குழுவின் மூலம் ஆரம்ப பரிசோதனை அறிக்கையை மீண்டும் மீளாய்வு செய்வதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தமையை அறியத்தருகின்றோம். ஆரம்ப விசாரணையின் அறிக்கை அடிப்படையில் 15 குற்றங்கள் வீதம் 05 உத்தியோகத்தர்களுக்காக விசாரணை நடாத்துவதற்கு கவனத்தில் கொள்ளக்கூடிய காலம் ஏற்படுகின்றமையால் எந்தவொரு செயல்முன்னேற்றமும் காண்பிக்காமையினால் அதிகார சபையினால் அதுவரையில் ரூபா 377,000 செலவினம் செயயப்பட்டமையால் உரிய விசாரணை அறிக்கையை விரைவாக பெற்றுத் தருமாறு தலைவருக்கு மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைக்கு சாதகமான பதிலொன்று

இவ்வாறான பயனற்ற செலவினங்களை செய்யாதிருத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | | கிடைக்காதிருந்ததுடன் இந்த சகலரும் பயிற்சி உத்தியோகத்தர் குழுவில் இருந்தமையினால் ஒழுக்காற்று அதிகாரியினால் தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் கள் மீண்டும் ஆரம்ப விசாரணை அறிக்கையை மீளாய்வு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டு முறையான ஒழுக்காற்று விசாரணை நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதை அறியத் தருகின்றோம். | |
| (iii) | ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுத்தல் மந்த நிலையிலும் முறையற்றதாகவும் இருந்தமையின் காரணமாக 09 மாதங்களுக்கு மேலாக வேலை நீக்கத்திற்கு உள்ளாக்கப்பட்டிருந்த உத்தியோகத்தருக்கு முறையான ஒழுக்காற்று விசாரணையொன்றை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் சகல குற்றங்களிலிருந்தும் விடுவிக்கப்பட்டு சேவையில் மீண்டும் அமர்த்தப்பட்டிருந்தனர். மேலும் சேவையை கைவிட்டுச் சென்ற காலத்திற்கு நிலுவை சம்பள கொடுப்பனவுகளுக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இந்த விசாரணைகளுக்கு செலுத்தப்பட்ட ரூபா 33,200 தொகையான செலவினம் பயனற்ற செலவினமாக இருந்தது. | NGJA/41/Inq/2019/03 ஆம் இலக்க குற்றப் பத்திரிகை தொடர்பாக ஒழுக்காற்று அதிகாரிக்கு பாதிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் 2020 யூலை 29 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த முறைப்பாட்டின் கீழ் பரீட்சிக்கப்பட்ட போது மேற்கூறப்பட்ட குற்றங்கள் உரிய காலத்தில் அவர் கட்டுநாயக்க ஏற்றுமதி நிலையத்தில் பொறுப்பான கடமைகளில் ஈடுபட்டிருக்காமையினால் அந்த குற்றப்பத்திரிகை தொடர்பாக மிகுதி ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இயலுமை காணப்படாதிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கைகள் பூர்த்தி செய்ததன் கீழ் உரிய உத்தியோகத்தரை மீண்டும் சேவையில் அமர்த்தி சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. இதன் போது இந்த பிழையான குற்றங்கள் தொடர்பாக முறையான ஒழுக்காற்று விசாரணையொன்று நடாத்துவதாயின் அதிகார | ஒழுக்காற்று பரிசோதனையை சரியாக மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன் அதற்காக இவ்வாறான பயனற்ற செலவினங்களை செய்யாதிருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சபைக்கு ரூபா 33,200 தொகைக்கு மேற்பட்ட செலவினமொன்றைச் செய்வதற்கான சந்தர்ப்பம் காணப்பட்டதுடன் அவ்வாறு ஒழுக்காற்று நடவடிக்கைகள் பூர்த்தி செய்வதன் மூலம் ஏற்படக் கூடியதாகவிருந்த நிதிரீதியான நட்டம் குறைக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) | 2015 ஆம் ஆண்டில் ரூபா 6.6 மில்லியனுக்கு மேற்பட்ட கிரயமொன்றை செய்து அதிகார சபைக்காக கொள்வனவு செய்யப்பட்ட மின் அடுப்பு தொழில்நுட்ப கோளாறின் காரணமாக அகற்றுவதற்கு ஏற்பட்டமையினால் அதிகார சபைக்கு ரூபா 6.6 மில்லியன் நிதி நட்டம் ஏற்பட்டிருந்தது. | சொத்துக்கள் இலக்கம் 01/ASS/CAB/FURNACE/1 இன் கீழ் உள்ள FURNACE CUPELLATION மின் அடுப்பை பயன்படுத்தும் போது மிகவும் பாரியளவான மின் அலகொன்று செலவிடப்பட்டிருந்ததுடன் அது தேவையான வெப்பநிலையை பெற்றுக் கொள்வதற்கு அதிக காலம் எடுத்திருந்தது. மேலும் மின் அடுப்பிலிருந்து வெளிப்படுகின்ற மேலதிக காந்துதலின் காரணமாக பிரயோகரீதியில் அந்த இயந்திரத்தை பயன்படுத்துதலும், அந்த இயந்திரத்தை செயற்படுத்துகின்ற உத்தியோகத்தர்களுக்கு அதிக ஆபத்திற்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டிருந்தமையின் காரணமாக பாவனையில் இருந்து அகற்றப்பட்டது என்பதை அறியத்தருகின்றோம். | தொழில்நுட்ப வழுக்கள் மற்றும் குறைபாடுகள் உள்ள மின் அடுப்பு கொள்வனவு செய்தல் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2005 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றுக்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 200,000 முதலீடு 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஏனைய சொத்துக்களின் கீழ் கணக்குகளில் | இழப்பீட்டு நட்டத்தின் கீழ் 2002 ஆம் ஆண்டு முதல் Gems & Gems Institute இற்கு செலுத்தப்பட்ட ரூபா 200,000 மீதி காண்பிக்கப்படுகின்றது. எனினும் இந்த மீதியை கணக்குகளிலிருந்து பதிவழிப்பதற்கு போதியளவான தகவல்களை கண்டறிவதற்கு முடியாதிருந்தமையினால் | இவ்வாறான நிதி ரீதியான நட்டங்கள் எதிர்காலத்தில் ஏற்படாமல் இருப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அந்த முதலீடு தொடர்பான தகவல்களை கண்டறிவதற்கு முடியாதிருந்தமையின் அடிப்படையில் அதிகார சபையினால் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமையின் காரணமாக ரூபா 200,000 தொகையான நிதி நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | கணக்கு அறிக்கைகளில் உரிய இழப்பீடுகள் காண்பிக்கப்பட்டுள்ளது. | |

### 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சர்வதேச கண்காட்சிக்காக ஏற்றுமதி செய்யப்படுகின்ற இரத்தினக்கல்களில் விற்பனை செய்யப்படாத இரத்தினக்கற்கள் 120 நாட்களுக்குள் மீண்டும் அதிகார சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்ட இரத்தினக் கற்களுக்காக ஏற்றுமதி பெறுமதியில் 0.5 சதவீதம் சேவைக் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும். இதன்போது விற்பனை தகவல்களை சமர்ப்பிப்பதற்கு ஏற்றுமதி யாளர்களுக்கு மீண்டும் 30 நாட்கள் சலுகைக் காலம் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்தக் காலத்திலும் குறித்துரைத்த விபரங்கள் சமர்ப்பிக்கப்படாமையின் அடிப்படையில் இரத்தினக் கற்களின் மொத்த பெறுமதியில் சேவைக் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும். எனினும் மீளாய்வாண்டில் அவ்வாறு ஏற்றுமதி செய்யப்பட்டு 150 நாட்களை விஞ்சிய 10 ஏற்றுமதியாளர்களிடமிருந்து | கொரோனா தொற்றுநோயின் தாக்கத்தின் காரணமாக இலங்கையை போன்றே உலகத்தின் ஏனைய நாடுகளிலும் சர்வதேச விமான போக்குவரத்து நிறுத்தப்பட்டமையினால் பொருட்களின் போக்குவரத்து தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினையான நிலைமையின் அடிப்படையில் ஏற்றுமதி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படாத இரத்தினக் கற்களை மீண்டும் 150 நாட்களுக்குள் கொண்டு வருவதற்கு முடியாதிருந்தமை தொடர்பாக ஏற்றுமதியாளர்களினால் விடுக்கப்பட்ட கோரிக்கையை கவனத்தில் கொண்டு ஏற்றுமதியை மீண்டும் வழங்குவதற்கு இருந்த சலுகைக்காலம் தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் அங்கீகாரத்துடன் இரண்டு சந்தர்ப்பங்களின் போது நீடிக்கப்பட்டிருந்தது. | இந்த சேவைக் கட்டணத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 11,018,756 சேவைக் கட்டணம் அறவிடப்படாது இருந்ததுடன் அந்த நிலுவை பணத்தை அறவிடாமல் மீண்டும் ஏற்றுமதி செய்வதற்கு அந்த ஏற்றுமதியாளர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | மீளாய்வாண்டின் கணக்குகளில் ரூபா 371,842,648 ஆக காண்பிக்கப்படுகின்ற கண்காட்சிபடுத்தப்பட்ட 03 இரத்தினக்கற்கள் 2021 பெப்ரவரி 10 ஆந் திகதி ரூபா 765,316,000 தொகையில் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. ஐந்தொகை திகதியின் பின்னர் இந்த இரத்தினக்கற்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தமை கணக்குகளின் குறிப்புக்களின் மூலம் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த 03 இரத்தினக்கற்களினதும் நிறை (கிராத்) பெறுமதி தொடர்பாக போதியளவான விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | 2021 பெப்ரவரி 10 ஆந் திகதி இடம்பெற்ற கண்காட்சியில் 03 இரத்தினக்கற்களுக்கு உரிய புதிய மதிப்பீட்டு பெறுமதி கணக்குளில் குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்த துடன் அந்த மதிப்பீட்டிற்குரிய விரிவான தகவல்கள் கணக்காய்விற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | கணக்குகளில் போதியளவாக உரிய விடயங்கள் காண்பிக்கப்படல் வேண்டும். |

**3.4 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இரத்தினபுரி அலுவலகக் கட்டிடத்தில் சிறிய இரத்தினக்கல் காட்சிக்கூடம் ஒன்றை ஆரம்பிப்பதற்காக 266.5 சதுர அடி மண்டபமொன்று ஒதுக்கப்பட்டு புதிய கொள்வனவுகள் மற்றும் பழுதுபார்த்தல்களுக்காக 2016- | ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த Mini Museum ஆரம்பிப்பதற்காக 2016 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை ரூபா 2,158,737 தொகை | திட்டமிடப்பட்டதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

2019 ஆம் ஆண்டு காலத்தில் ரூபா 2,158,737 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. இந்த காட்சிக்கூடத்திற்காக ரூபா 1,475,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட 12 கண்காட்சி அலுமாரிகள் 04 வருடங்களில் குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்த காட்சிக்கூடம் மீளாய்வாண்டில் இன்னுமொரு இடத்தில் ஸ்தாபிக்கப்பட்டதன் காரணமாக அதற்காக செலவிடப்பட்ட பணம் பயனற்ற செலவினமாக இருந்தது.

அதிகார சபையினால் செலவிடப்பட்டிருந்தமையை ஏற்றுக்கொள்கின்றோம். இந்த காட்சிக்கூடம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் போது இரத்தினபுரி ஆய்வுகூடத்திற்கு பொறுப்பாக இருந்த உத்தியோகத்தர் 2019 ஆம் ஆண்டின் போது வேலை நீக்கத்திற்கு உட்பட்டதன் அடிப்படையில் இந்த செயற்பாடுகளை முன்கொண்டு செல்வதற்கு முடியாதிருந்தது. அதிகார சபையின் முன்னாள் தலைவரின் ஆலோசனையின் பிரகாரம் Mini Museum ஒன்று அந்த இடத்தில் ஸ்தாபிக்கப்படாமல் பழைய கட்டிடத்தில் மேல் மாடியில் 5000 சதுர அடி அளவான இட அளவில் தற்போது ஆரம்பரீதியில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வு ஐயவினாவின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைவாக பயன்படுத்தப்பட்ட சகல கண்ணாடி காட்சி அலுமாரிகள் புதிய காட்சிக்கூடத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது.